சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 118 / 2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 18.04.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சின்னகுஞ்சு | கிராமம் : | |
| த/பெ : | கருப்பண்ணன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல்தகவல் அறிக்கை உண்மைநகல் - ம.சா.ஆ.1

2) லட்சுமி இறப்புச்சான்று நகல் - ம.சா.ஆ.2 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

3) லட்சுமி வாரிசுசான்று இணையதளநகல் - ம.சா.ஆ.3

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

நான் விபத்துசமயத்தில் அருகில் இல்லை யாருடைய தவறால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கும் எனது மனைவிக்கும் சுமார் 3 வருடம் வயது வித்யாசம் இருக்கும். எனக்கு குடும்ப அட்டை உள்ளது அதில் எனது மனைவியின் வயது குறிப்பிடப்பட்டுள்ளது அதை நான் தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்தால் எனது மனைவி இறந்த போது அவருக்கு 55 வயது என தெரிந்துவிடும் எ ன்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல, 1ம் எதிர்மனுதாரர் தன்மீது தவறு இல்லை என்று குற்ற வழக்கை நடத்தி வருவதால் தான் என்னால் குற்ற வழக்கின் தீர்ப்புரையை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல,. இந்த விபத்திற்கு எனது மனைவி தான் காரணம் என்றால்சரியல்ல. குற்ற வழக்கின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் எங்கள் வழக்கு பாதிக்கப்படும் என்தால் தான் அதை தாக்்ல செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக எனது

மனைவி மாதம் ரூ.15000 வருமானம் பெற்றதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் கோரியுள்ள நஷ்டஈடு மிக அதிகம் என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

ஒம் / சின்னகுஞ்சு

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.